**தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்டமிட்டவாறு குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்காக 2023 ஆண்டில் திணைக்களத்தினால் கூட்டுத்தொகை ரூபா 105.80 மில்லியன் தொகை கட்டுநிதி விண்ணப்பித்திருந்த போதிலும் திறைசேரியினால் கூட்டுத்தொகை ரூபா 78.15 மில்லியன் தொகை மாத்திரம் வழங்கியிருந்தது. அதன்படி, கூட்டுத்தொகை ரூபா 27.65 மில்லியன் தொகை எனப்படும் 26 சதவீத விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதியை விட குறைவாக கிடைத்திருந்ததென அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். | திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான கட்டுநிதிகளுக்காக சரியான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் போதியளவு ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்ளாமல் 02 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 3,000,000 தொகை நி.பி. 66 இன் மூலம் மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டிருந்ததுடன், அது அந்த செலவு விடயத்தின் ஆரம்ப மதிப்பீடு ஏற்பாடுகளின் 200 சதவீதம் மற்றும் 286 சதவீதமாக காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் மூலம் திட்டமிடப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை விட மிகையாக வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்ட எண்ணிக்கைக்கு பங்குபற்ற நேரிடல் மற்றும் திணைக்களத்தின் கீழ் இலங்கை தேசிய மதிப்பாய்வுக் கொள்கையை செயற்படுத்தும் சட்டகம் - 2023 வெளியிடும் வைபவம் காரணமாக ஏற்பாடுகள் தேவைப்பட்ட காரணத்தினால் என. | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க சரியான மற்றும் யதார்த்தமான வருடாந்த செலவு மதிப்பீடு தயாரிக்க வேண்டும். |

## 2.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.5 மற்றும் 4.6 இற்கு இணங்க சேவையை விட்டுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பாக செயற்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்கள சேவையை விட்டுச் சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட 8 வருடங்கள் பழமையான ரூபா 139,921 தொகை இற்கான கடன் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறுவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதுடன், அவருக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அவரிடம் அரசாங்கத்துக்கு அறவிட வேண்டிய அறவீடுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவிக்கின்றேன். | விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் மீளாய்வாண்டு தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலில் காட்டப்பட்டுள்ள படிவத்துக்கு இணங்க, மீளாய்வாண்டிற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போது கடமையாற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் வருடாந்த தொழிற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைத் திட்டம் உட்படுத்தப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2024 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலில் காட்டப்பட்டுள்ள படிவத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

#### 3.1.2 பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி விளைவுகளின் உருவாக்களை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து அபிவிருத்தி செயற்திட்டங்களின் மேற்பார்வை, ஆலோசனை மற்றும் வசதிகள் வழங்கள் போலவே செயற்திட்டம் செயற்படுத்தப்படும் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கி வளங்களை உச்ச மட்ட அளவில் பயன்படுத்துவதன் மூலம் இணங்கியிருந்த காலச் சட்டகத்தில் மற்றும் கிரயத்தில் எதிர்பார்த்த அபிவிருத்தி விளைவுகளின் உருவாக்களை மேம்படுத்துதல் இந்த திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாக இருந்ததுடன், அதற்குரிய கருமங்கள் அதன்படி இனங்காணப்பட்டிருந்தது. அந்த கருமங்கள் நிறைவேற்றல் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு | இந்த திணைக்களத்தின் மூலம் பாரிய மற்றும் பிரமாண்டமான செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் | வழங்களை உச்சமட்டமாக பயன்படுத்தி இணங்கிய காலசட்டகத்தில் |

நிதிப்படுத்தல் மூலம் பல்வேறு வரிசை அமைச்சுக்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த பாரிய மற்றும் பிரமாண்டமான அபிவிருத்திச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 209 தொகை காணப்பட்டதுடன், இந்த பாரிய மற்றும் பிரமாண்டமான செயற்திட்டங்களின் 91 உள்நாட்டு நிதியம் மற்றும் கடன் மூலமும், 118 செயற்திட்டங்கள் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மூலம் நிதியளிப்புச் செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்திட்டங்களில் மீளாய்வாண்டு இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த 107 செயற்திட்டங்களில் 23 செயற்திட்டங்கள் மாத்திரம் இறுதி செயற்திட்ட விளைவினை உருவாக்குவதற்கு முடியுமாக இருந்ததுடன், செயலாற்றுகை சிக்கல்கள் காரணமாக 06 பிரமாண்டமான திட்டங்கள் வருட இறுதியளவில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த பாரிய மற்றும் பிரமாண்டமான அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் அண்ணளவாக ரூபா 716 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் 2023 ஆண்டு இறுதியளவில் பயன்படுத்துவதற்கு கூடியதாக இருந்த எண்ணிக்கை ரூபா 361 பில்லியன் தொகை எனப்படும் ஏற்பாடுகளில் 50 சதவீதம் என கண்டறியப்பட்டது. அதன்படி, எதிர்பார்த்த அபிவிருத்தி விளைவுகளின் உருவாக்களை மேம்படுத்துவதற்காக திணைக்களத்தின் குறிக்கோள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

மாதாந்தம் மீளாய்வு செய்யப்படுவதுடன், காளாண்டு ரீதியாக அந்த முன்னேற்றம் மற்றும் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சரவை அறிவுருத்தப்படுகின்றது. அமைச்சரவையினால் அதற்காக வழங்கப்படும் தீர்மானம் வரிசை அமைச்சுக்களில் செயலாளர்களுக்க அறிவிக்கப்படுவதுடன் திணைக்களத்தினால் இனங்காணப்படும் வரிசை அமைச்சினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சிக்கல்கள் தேசிய செயற்பாட்டு அறைக்கு சமர்ப்பித்தலும் இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் குறிப்பிட்ட வசதிகளை பயன்படுத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் எதிர்பார்த்த இலக்குகளின் படி அடையும் செய்முறை அமைச்சுச் செயலாளரின் பொறுப்பொன்றாகும்.

மற்றும் கிரயத்தில் எதிர்பார்த்த அபிவிருத்தி விளைவுகளை அடைவதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த செயற்திட்ட மதிப்பாய்வு மற்றும் முகாமைத்துவம் செய்தலின் கீழ் 2023 ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 02 செயற்திட்டங்கள் தொடர்பாக மதிப்பாய்வு கருமங்கள் மேற்கொள்வதற்காக ஆரம்ப கலந்துரையாடல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டடிருந்தது என அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றேன். | திட்டமிட்டவாறு எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருந்த 02 செயற்பாடுகளின் குறிக்கோளை நெருங்குதல் 50 – 77 சதவீத இடைப்பட்ட மட்டத்தில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | உச்சமட்ட மட்டத்தில் குறிக்கோளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக ரூபா 101.76 மில்லியனுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 82.10 மில்லியன் எனப்படும் 81 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிறுவனங்களுக்கு அரச இலத்திரனியல் பெறுகை முறைமை அறிமுகப்படுத்தல் தொடர்பான 2018 ஒக்தோபர் 23 திகதிய இலக்கம் 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 திகதிய 08/2019 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க அரச பெறுகை நிறுவனத்தை பதிவு செய்தல், இணைப்பு உத்தியோகத்தர்களை பதிவு செய்தல், வழங்குனர்களை பதிவு செய்தல், வருடாந்த பெறுகைத் திட்டம் சமர்ப்பித்தல், | 2024 ஆண்டின் போது இலத்திரனியல் பெறுகை முறைமையின் கீழ் திணைக்களத்திற்கு தேவையான பண்டங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கருணையுடன் அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகை கருமங்கள் இலத்திரனியல் பெறுகை முறைமையின் கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்தது. |

பெறுகைக்கான அறிவித்தல் வெளியிடுதல், விலை ஒப்பீட்டு முறைக்கு, இலத்திரனியல் பெறுகை முறையினை பயன்படுத்தல் ஆகிய அலுவல்கள், அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், திணைக்களத்தினால் மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படாமல் 2023 ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த ஒரு பெறுகை இலத்திரனியல் பெறுகை முறைமையை பயன்படுத்தாமல் விலை ஒப்பீட்டு முறைமை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம் முன்னேற்ற அலுவல்களுக்காக தரவுகள் சேகரிக்கும் பிரதான ஊடகமாக பயன்படுத்துவதற்காக தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை (NDIS), புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி இணையத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்ட மேற்பார்வை முறைமையொன்று நிறுவுவதற்காக 2021 ஆண்டின் போது திறந்த கூறுவிலைகளின் கீழ் விலைகூறல்கள் அழைக்கப்பட்டு ஒப்பந்த வேலைப் பெறுமதியென வரியுடன் ரூபா 135,720,000 இற்கான விலைகூறல் சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனி ஒன்றிற்கு 2021 நவம்பர் 25 திகதி முறைமையை தயாரிக்கும் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு 2022 பெப்ரவரி 03 திகதி முற்பணமாக ரூபா 12,169,950 தொகை வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரின் பலவீன செயலாற்றுகையின் காரணமாக 2022 ஆகஸ்ட் 31 திகதி இந்த ஒப்பந்தவேலை இடைநிறுத்தப்பட்டு, ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையாகிய ரூபா 12,169,950 இற்குரிய முற்பண பாதுகாப்புமுறி 2022 ஒக்தோபர் 20 திகதி மீண்டும் திணைக்களத்திற்கு அறவீடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இங்கு 09 மாதங்களுக்கு மிகையான காலமொன்று மேற்கூறிய முற்பணத் தொகை ஒப்பந்தக்காரரிடம் தடுத்து வைப்பதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், இதுவரை பொருத்தமான முறைமை ஒன்று தயாரித்துக் கொள்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை தயாரிப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 12,169,950.70 தொகை முற்பணம் ஒன்றாக அரச பெறுகை நடைமுறையின் படி வழங்கப்பட்டிருந்தது. முற்பணம் வழங்கப்பட்டு 09 மாதங்கள் கடந்த பின்னர் ஒப்பந்தக்காரருக்கு இந்தக் கருமம் உரிய நேரத்தில் உரியவாறு மேற்கொள்வதற்கு முடியாமையை உணர்ந்து | தேசிய அபிவிருத்தித் தகவல்கள் முறைமை விரைவாக தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டமையால் அந்த ஒப்பந்த வேலையை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் மூலம் திணைக்களத்திற்கு தேவையானவாறு தயாரிக்கப்படாத மற்றும் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாத கணினி மென்பொருளொன்று தயாரித்தலின் மூலம் அரசுக்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த சிக்கனமற்ற கிரயமொன்றிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது. | |
| (ii) | NDIS நவீனமயப்படுத்தும் ஒப்பந்தவேலை இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் 2023 ஆண்டின் போது செயற்திட்ட மீளாய்வு, அறிக்கையிடல், கூட்டிணைப்பு மற்றும் செயற்படுத்தும் போது ஏற்படக் கூடிய சிக்கல்கள் தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினரை தொடர்பு கொண்டு தீர்ப்பதற்காக விஷேட முயற்சியொன்று மேற்கொள்ள நேரிட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் மேற்கூறிய ஒப்பந்தவேலை இடைநிறுத்தப்பட்ட 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருடமும் 04 மாதங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் தகவல் முறைமையை நவீன மயப்படுத்துவதற்குரிய தொடர் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | இந்த ஒப்பந்த வேலை இடைநிறுத்திய பின்னர் இவ்வாறான சிக்கலான மென்பொருட்கள் தயாரித்தல் இலகுவாகக் காணப்படாததுடன் மற்றும் காலம் எடுக்கக் கூடிய கருமம் என தெளிவாகியமையால் தற்போது திணைக்களத்திற்கு சொந்தமான செயற்படா நிலையில் காணப்படும் ஒன்றித்த தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை 2024 ஆண்டின் போது ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள உலகவங்கி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் சுகாதார முறைமை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் (NDIS) மென்பொருளின் திருத்த வேலைக்காக உதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என மேலும் குறிப்பிடுகின்றேன். எவ்வாறாயினும் (NDIS) முறைமையை தயாரித்துக் கொள்ளும் வரை திணைக்களத்தின் கருமங்கள் மிகவும் சிரமத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்க விரும்புகின்றேன். | பொருத்தமான தகவல் முறைமையொன்று விரைவாக தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

### 3.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் நிறைவேற்றுவதில் முன்னேற்றம்

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் எதிர்பார்த்த பெறுபேறுகளை நெருங்கும் முன்னேற்றத்தின் மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வு தொடர்பாக திணைக்களத்தினால் இனங்கண்டிருந்த பணிப்பொறுப்புக்களின் முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி தகவல் முறைமை செயற்படு நிலைமையில் காணப்படாமையால் திணைக்களத்தினால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் 03 வெற்றி சுட்டெண்கள் தொடர்பாக எதுவித முன்னேற்றமும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் 3 வெற்றிச் சுட்டிகள்இன் குறிக்கோளை நெருங்குதல் 49 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கின்றேன். | மேற்படி |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் எண்ணிக்கை 101 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 32 பதவிகள் எனப்படும் 32 சதவீத வெற்றிடங்கள் காணப்பட்டது. அந்த வெற்றிடங்களில் 12 சிரேஷ்ட மட்ட பதவிகளும், 03 மூன்றாம் மட்ட பதவிகளும், 12 இரண்டாம் மட்ட பதவிகளும், 05 ஆரம்ப மட்டப் | நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக பொதுநிருவாகம், உள்ளாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினை அறிவுருத்தப்பட்டது. | திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவ்வாறல்லாத பதவிகள் |

| | |
|---|---|
| பதவிகளுமாக வெற்றிடங்கள் காணப்பட்டது. அதன்படி வெற்றிடப் பதவிகளை நிரப்புவது அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையை திருத்திக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணப்படின் அவற்றை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |